# Current Affairs, October 24 & 25, 2024

1. இந்தியாவின் "கல்வான் பள்ளத்தாக்கு" எந்த நாட்டின் எல்லையில் அமைந்துள்ளது

(A) சீனா  (B) ஆப்கானிஸ்தான்
(C) மியான்மர்  (D) வங்காளதேசம்
(E) விடை தெரியவில்லை

**விடை : சீனா**

- 2020 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் சீன ராணுவத்தினர் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கல்வான் பள்ளத்தாக்கில் பதற்றமான சூழல் ஏற்பட்டது
- தற்போது இரு நாடுகளும் பேச்சு வார்த்தையின் மூலம் தற்போது கல்வான் பள்ளத்தாக்கில் அமைதி நிலவுகிறது

2. ராஷ்ட்ரீய ஏக்தா திவாஸ் " தேசிய ஒருமைப்பாட்டு தினம்" யாருடைய பிறந்த நாளில் கொண்டாடப்படுகிறது

(A) இந்திரா காந்தி  (B) ஜவஹர்லால் நேரு
(C) மகாத்மா காந்தியடிகள்  (D) வல்லபாய் படேல்
(E) விடை தெரியவில்லை

**விடை : சர்தார் வல்லபாய் படேல்**

- சர்தார் வல்லபாய் படேலின் 150ஆவது பிறந்தநாள் 31 அக்டோபர் 2024
- இவரது பிறந்த நாளை இரண்டு ஆண்டு நிகழ்ச்சிகளுக்கு மத்திய அரசு திட்டம் வகுத்துள்ளது (2024 முதல் 2026 வரை)
- வல்லபாய் படேல் 31 அக்டோபர் 1875 ஆம் ஆண்டு பிறந்தார்
- ஊர் குஜராத்தின் நாடியாட் பகுதி
- இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர்
- 550 க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்த பெருமைக்குரியவர்
- இவரது பிறந்தநாளை 2014 ஆம் ஆண்டு முதல் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது

3. இந்தியாவின் முதன்மையான காற்றாலை எரிசக்தி வர்த்தக கண்காட்சி மற்றும் மாநாடான "விண்டர்ஜி இந்தியா 2024" எங்கு நடைபெற்றது

(A) கொச்சி (B) ஹைதராபாத்

(C) பெங்களூரு (D) சென்னை

(E) விடை தெரியவில்லை

**விடை : சென்னை**

4. இந்தியாவின் முதல் வந்தே பாரத் ரயில் எந்த இரு நகரங்களுக்கு இடையில் இயக்கப்பட்டது

(A) மும்பை - டெல்லி (B) டெல்லி - வாரணாசி

(C) டெல்லி - லக்னோ (D) மீரட் - வாரணாசி

(E) விடை தெரியவில்லை

**விடை : டெல்லியில் இருந்து வாரணாசி**

- வந்தே பாரத் ரயில் திட்டம் இந்தியாவில் 2019 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
- தென்னிந்தியாவின் முதல் வந்தே பாரத் சென்னை - மைசூர் இடையே இயக்கப்பட்டது.
- தமிழ்நாட்டின் முதல் வந்தே பாரத் ரயில் சென்னை கோவை இடையே இயக்கப்பட்டது.
- ஆரம்பத்தில் வந்தே பாரத் அறையில் அமர்ந்து பயணம் செய்யும் வசதி மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தற்போது தூங்கும் வசதியுடன் கூடிய வந்தே மாத துறையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- இந்த ரயிலை பெங்களூருவில் உள்ள பாரத் எர்த் மூவர்ஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது.

5. கானமயில் மீட்பு திட்டம் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?

(A) 2015 (B) 2016

(C) 2018 (D) 2019

(E) விடை தெரியவில்லை

**விடை - 2016**

- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் உள்ள பாலைவன தேசிய பூங்காவில் கான மயில் இனப்பெருக்க மையம் அமைக்கப்பட்டுள்ளது

6. இந்திய உயிர் சக்தி வேளாண்மை கூட்டமைப்பின் தேசிய மாநாடு எங்கு நடைபெற்றது

(A) பெங்களூரு (B) சென்னை

(C) சண்டிகர் (D) காந்திநகர்

(E) விடை தெரியவில்லை

**விடை பெங்களூரு**

- கர்நாடக மாநிலத்தின் தலைநகரம்

7. தமிழகத்தில் மலையேற்றம் செய்வதற்கு இணையதளம் மூலம் முன்பதிவு செய்யும் புதிய திட்டத்தை தொடங்கி வைத்தவர் யார்?

(A) M. K. ஸ்டாலின் (B) உதயநிதி ஸ்டாலின்

(C) பொன்முடி (D) சுப்ரமணியன்

(E) விடை தெரியவில்லை

**விடை : துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்**

- தமிழ்நாட்டில் மலையேற்றத்திற்காக 40 பாதைகளை தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்துள்ளது
- மலையேற்றம் செய்வதில் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்த தனி இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது - www.trektamilnadu.com

8. இந்திய ராணுவம் சார்பில் " சாணக்யா பாதுகாப்பு உரையாடல் 2024" எங்கு நடைபெற்றது?

(A) புது டெல்லி (B) மும்பை

(C) லக்னோ (D) ஜம்மு காஷ்மீர்

(E) விடை தெரியவில்லை

**விடை: புதுடெல்லி**

- இந்த மாநாட்டை புதுடில்லியில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்

9. அண்மையில் தனது ஓய்வை அறிவித்த விளையாட்டு வீராங்கனை ராணி ராம்பால் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்

(A) டென்னிஸ் (B) மல்யுத்தம்

(C) கிரிக்கெட் (D) ஹாக்கி

(E) விடை தெரியவில்லை

**விடை : ஹாக்கி**

- ஹரியானா மாநிலத்தை சேர்ந்தவர்
- இந்திய அணியில் கடந்த 2008இல் 14 வயதில் அறிமுகமானார்
- இந்தியாவிற்காக 16 ஆண்டுகள் களமாடி 254 ஆட்டங்களில் 205 கோள்களை அடித்திருக்கிறார்
- இவர் தலைமையிலேயே இந்திய அணி ஒலிம்பிக் ஹாக்கியில் நான்காம் இடத்தை பிடித்தது(2021 டோக்கியோ ஒலிம்பிக்)

- விளையாட்டுத்துறையில் உச்சமான மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது
- நாட்டின் நான்காவது உயரிய விருதான பத்மஸ்ரீ விருது 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது

10. முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் பதக்க பட்டியலில் முதலிடத்தில் உள்ள மாவட்டம் எது

(A) சென்னை (B) தேனி

(C) கோவை (D) செங்கல்பட்டு

(E) விடை தெரியவில்லை

**விடை : சென்னை**

- Cm tropy 2024 theme - களம் நமதே
- முதலிடம் பிடித்த மாவட்டம் சென்னை